# பரீட்சகரின் அறிக்கை

## மட்டம் II பரீட்சை – 2021 யூலை

## (202) டிஜிடல் சூழலில் தகவல் முறைமைகள்

இந்த வினாத்தாள் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்தின் புதிய அபிவிருத்திகள் மற்றும் போக்குகள் பற்றி அதிகமான கவனத்தைச் செலுத்தி, தகவல் தொழில்நுட்பத்தின் ஒட்டுமொத்த அம்சங்களையும் பரீட்சித்திருந்தது. இந்த வினாத்தாளுக்கு விடையளிக்கும்போது, தகவல் முறைமைகளில் செல்வாக்குச் செலுத்தும் ஒழுக்கநெறி, சமூக மற்றும் சட்டச் சூழல் தாக்கங்கள் பற்றிய ஆழமான அறிவு முக்கியமானது என்பது கவனிக்கப்பட வேண்டியதாகும்.

இந்த வினாத்தாள் **A, B, C** என மூன்று பகுதிகளை உள்ளடக்கியுள்ளது. இவ்வினாத்தாளிலுள்ள சகல வினாக்களுக்கும் விடையளிக்குமாறு கேட்கப்பட்டிருந்தது.

## <u>பகுதி A</u>

### வினா இல. 01

தகவல் முறைமைகள் மற்றும் டிஜிடல் சூழல் பற்றிய ஒட்டுமொத்த அறிவும் இவ்வினாவின் மூலம் இலகுபடுத்தப்பட்ட முறையில் பரீட்சிக்கப்பட்டது. பெரும்பாலும் எல்லாப் பரீட்சார்த்திகளும் இவ்வினாவுக்கு விடையளித்திருந்தனர். பெரும்பாலானவர்கள் நியாயமானளவு புள்ளிகளைப் பெற்றிருந்தனர்.

பரீட்சார்த்திகள் புதிய IT போக்குகள், தகவல் தொழில்நுட்பத் துறையின் சட்ட மற்றும் ஒழுக்கநெறி அம்சங்கள் போன்ற பாடப் பரப்புகளில் கூடிய கவனம் செலுத்த வேண்டும்.

இத்தகைய நோக்கச் சோதனை வினாக்களில் அதிக புள்ளிகளைப் பெற்றுக் கொள்வதானது ஒட்டு மொத்தத்தில் இந்தப் பாடத்தில் உயர்ந்தளவு புள்ளிகளைப் பெற்றுக் கொள்ள பரீட்சார்த்திகளுக்கு நிச்சயமாக உதவி புரியும்.

**பகுதி 1.11** தொடக்கம் **1.15** வரையான வினாக்களுக்கு சரியானது அல்லது தவறானது எனக் குறிப்பிடுவதற்குப் பதிலாக சில பரீட்சார்த்திகள் அடையாளங்களை இட்டிருந்தனர். ஆயினும் சரியான அமைப்பில் விடைகளை அளிப்பது எப்பொழுதும் அனுகூலமானதாக இருக்கும்.

**இந்த வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் இருந்தது.**

## <u>பகுதி B</u>

### வினா இல. 02

இவ்வினாவில், வணிக நிறுவனங்கள் மீது தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் முறைமைகளின் தாக்கங்கள் பற்றிய அறிவைப் பரீட்சிக்க எதிர்பார்க்கப்பட்டது. பெரும்பாலும் சகல பரீட்சார்த்திகளும் இவ்வினாவுக்கு விடையளித்திருந்ததுடன் பலரால் **பகுதி (a)** இற்கு சரியான விடை அளிக்க முடிந்திருந்தது.

**பகுதி (b)** இல், சில பரீட்சார்த்திகள் வினாவைப் பிழையாக விளங்கியிருந்தனர். தகவல் முறைமைகள் பெறுமதி சேர்ப்புகள் மற்றும் போட்டி அனுகூலங்களை வணிக நிறுவனங்களுக்கு வழங்குவதால் அவை பிரபல்யம் அடைந்துள்ளன என்ற விடயத்தைக் குறிப்பிட அவர்களால் இயலவில்லை.

**பகுதி (c)** இல், சில பரீட்சார்த்திகளால் பரீட்சைச் செயன்முறையின் பயனுறுதித்தன்மையையும் வினைத்திறனையும் மேம்படுத்துவதற்கு தகவல் தொழில்நுட்பத்தை எவ்வாறு பிரயோகிக்கலாம் என்பதை விபரிக்க முடியவில்லை. அதற்குப் பதிலாக அவர்கள் வினாவில் குறிப்பிடப்பட்டிருந்த நடவடிக்கைகளை வெறுமனே குறிப்பிட்டிருந்தனர்.

**இந்த வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை சராசரி மட்டத்தில் காணப்பட்டது.**

## வினா இல. 03

இந்த வினா வெவ்வேறு வகையான இயங்குதள முறைமைகளையும் நிகழ்நிலைக் கல்விக்கு வசதியளிப்பதற்காக திறன்பேசி ஒன்றைப் பயன்படுத்தி வேறுபட்ட இணைப்புத் தொழில்நுட்பங்களின் உதவியுடன் இணையத்தை எவ்வாறு அணுகுவது என்பது பற்றியும் பரீட்சார்த்திகள் கொண்டுள்ள அறவைப் பரீட்சிக்க விரும்பியது. பெரும்பாலும் எல்லாப் பரீட்சார்த்திகளும் இவ்வினாவுக்கு விடை அளித்திருந்ததுடன் அவர்களின் செயலாற்றுகையும் திருப்திகரமானதாக அமைந்திருந்தது.

**பகுதி (b)** இற்கு, சில பரீட்சார்த்திகள் வினாவைப் பிழையாக விளங்கிக் கொண்டதுடன் அவர்கள் வன் தட்டிற்குப் பதிலாக Google drive அல்லது One drive ஐப் பயன்படுத்துவதன் அனுகூலங்களையும் பிரதிகூலங்களையும் குறிப்பிட்டிருந்தனர்.

**பகுதி (c)** இற்கு, ஒரு கையளவு பரீட்சார்த்திகள் மாத்திரமே இணைய இணைப்பை மடிக் கணினிக்கும் விரிவாக்க முடியும் என்பதைக் குறிப்பிட்டிருந்தனர்.

**இந்த வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் இருந்தது.**

## வினா இல. 04

ஆடைத் தயாரிப்பு நிறுவனம் ஒன்றிற்குத் தேவையான தகவல் முறைமைகள் / தொகுதிகளின் வகைகளை இனங்காண்பதற்கான பரீட்சார்த்திகளின் ஆற்றல் இங்கு பரீட்சிக்கப்பட்டது. பெரும்பாலும் எல்லாப் பரீட்சார்த்திகளும் இந்த வினாவுக்கு விடையளித்திருந்தனர். அவர்களில் பலரால் தரப்பட்ட விடய ஆய்வுக்கான தகவல் முறைமைகளை இனங்காண முடிந்திருந்தது.

எவ்வாறாயினும், சில பரீட்சார்த்திகளால் லங்கா ஆடைத் தொழிற்சாலைக்கான அத்தகைய தகவல் முறைமையின் தேவையை நியாயப்படுத்த முடியவில்லை. அவர்கள் சில வகை தகவல் முறைமைகளைக் குறிப்பிட்டிருந்தனர்.

**இந்த வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை சராசரி மட்டத்தில் காணப்பட்டது.**

## வினா இல. 05

சமூக வலையமைப்புகள் மற்றும் சமூக வலையமைப்புகளின் சட்டவிரோத அணுகலுக்கு எதிராக மேற்கொள்ளப்படக்கூடிய சாத்தியமான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் போன்றவை தொடர்பான பரீட்சார்த்திகளின் அறிவு பரீட்சிக்கப்பட்டது. பெரும்பாலும் எல்லாப் பரீட்சார்த்திகளும் இவ்வினாவுக்கு விடையளித்திருந்ததுடன் பலர் சரியான விடையையும் அளித்திருந்தனர்.

**பகுதி (b)** இற்கு, சில பரீட்சார்த்திகளால், இரு காரணி அங்கீகாரங்கள் மற்றும் பொதுவான கணினிகளில் தனிப்பட்ட கணக்கைப் பயன்படுத்துவதைத் தவிர்த்தல் போன்ற சமூக வலையமைப்புக் கணக்குகளை சட்டவிரோதமாக அணுகுவதற்கு எதிராக பொருத்தமான நடவடிக்கைகளை வழங்குவதற்கு இயலாமற் போயிருந்தது.

**இந்த வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் இருந்தது.**

## வினா இல. 06

இலவசமாகவும் எளிதாக அணுகக்கூடியதுமான ''பெரியளவில் திறந்தநிலை நிகழ்நிலை பாடநெறிகள்'' பற்றிய அறிவு மற்றும் நிறுவனங்கள் மீது தாக்கம் செலுத்துகின்ற ''நிதித் தொழில்நுட்பம்'' பற்றிய அறிவு என்பன பரீட்சிக்கப்பட்டன. இந்த வினாவும் ஒரு கட்டாய வினாவாக இருந்த போதிலும் சில பரீட்சார்த்திகள் இந்த வினாவைப் புறக்கணித்திருந்தனர்.

சில பரீட்சார்த்திகளுக்கு "Fin Tech" என்பது பற்றித் தெரிந்திருக்கவில்லை.

ஒப்பீட்டளவில் இந்த வினாவுக்காக குறைந்தளவான புள்ளிகளையே பரீட்சார்த்திகளால் பெற முடிந்தது.

பரீட்சார்த்திகள் இந்தப் பாடப் பரப்பு தொடர்பில் அதிகளவான பயிற்சிகளைச் செய்தல் வேண்டும்.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் காணப்படவில்லை.**

## வினா இல. 07

இந்த வினா தரப்பட்ட விடய ஆய்வை அடிப்படையாகக் கொண்டிருந்தது. கோட்பாட்டை விளங்கிக் கொண்டு, அதனைத் தரப்பட்ட விவரணத்திற்குப் பிரயோகிக்கின்ற திறமை எதிர்பார்க்கப்பட்டது. தரப்பட்ட நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு சாத்தியமான IT தந்திரோபாயங்களை விவரிப்பதற்கான பரீட்சார்த்திகளின் அறிவு பரீட்சிக்கப்பட்டது.

பெரும்பாலும் எல்லாப் பரீட்சார்த்திகளும் இவ்வினாவுக்கு விடையளித்திருந்தனர். **பகுதி (a)** மற்றும் **பகுதி (b)** ஆகியவற்றுக்கு அளிக்கப்பட்டிருந்த பெருமளவான விடைகள் திருப்தியானதாக அமையவில்லை. அதிகளவான விடைகளில் காணப்பட்ட பொதுவான பிரச்சினை விடய ஆய்வுடன் விவரிக்காமை ஆகும்.

பெரும்பாலும் அனைவரும் **பகுதி (c)** மற்றும் **பகுதி (e)** இற்கு திருப்திகரமாக விடையளித்திருந்தனர்.

**பகுதி (d)** இற்கு, சில பரீட்சார்த்திகள் வினாவைப் பிழையாக விளங்கியிருந்ததுடன் அவர்கள் மென்பொருள் பிரயோகங்கள் பற்றி எழுதியிருந்தனர்.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் காணப்படவில்லை.**

- - - -

## <u>செயலாற்றுகையை மேம்படுத்துவதற்கான உதவிக் குறிப்புகள்:</u>

1. முழுப் பாடத்திட்டத்தையும் ஆழமாகப் படிக்கவும்.

2. பரீட்சார்த்திகள் வினாவைக் கவனமாக வாசித்து, வினாவில் நேரடியான விடை எதிர்பார்க்கப்படும் சந்தர்ப்பத்தில் தேவையற்ற / சம்பந்தமற்ற விபரிப்புகளையும் விபரங்களையும் எழுத வேண்டாம்.

3. தகவல் தொழில்நுட்பவியலுடன் தொடர்புடைய பாடப்புத்தகங்கள், நூல்கள் கட்டுரைகள், சஞ்சிகைகள் மற்றும் ஏனையவற்றை வாசிக்கவும்.

4. விடைகளை எழுதும்போது தேவையாயின் உதாரணங்களை வழங்கி, ஒழுங்கமைக்கப்பட்ட முறையில் தகவல் தொழில்நுட்பவியலுடன் தொடர்புடைய கோட்பாட்டு ரீதியானதும் செய்முறை ரீதியானதுமான அறிவை சமர்ப்பிப்பது முக்கியமானதாகும்.

5. கையெழுத்து விளங்கக்கூடியதாக இருப்பதையும் விடைகளுக்கு சரியாக இலக்கமிடப்பட்டிருப்பதையும் உரிய முறையில் உறுதிப்படுத்திக் கொள்ளவும்.

6. வினாப்பத்திரத்தில் தரப்பட்ட அறிவுறுத்தல்களைப் பின்பற்றவும்.

7. உமது அறிவை மேம்படுத்திக் கொள்வதற்காக கடந்தகால வினாத்தாள்கள்/ முன்னோடி வினாத்தாள்கள் மற்றும் விடைகளைப் படிக்கவும்.

8. நேரத்தை வினைத்திறனான வகையில் பயன்படுத்த பயிற்சி செய்யவும்.

9. விடைத்தாளை ஒப்படைப்பதற்கு முன்னர், விடைகள் சரியாக இலக்கமிடப்பட்டுள்ளனவா என்பதை இருமுறை பரீட்சிக்கவும்.

10. நல்ல தயார்படுத்தலுடனும் சித்தியடைதல் என்னும் நோக்கத்துடன் பரீட்சையை எழுதவும்.

- * * * -